**கவனிக்க.-** *23.12.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1739 - 2011 දෙසැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2011.12.30**

*1739 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 154 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.-** (i) இலங்கை சமூக மருந்தாளர்கள் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2011, செத்தெம்பர் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2011, செத்தெம்பர் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2011, ஒற்றோபர் 14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, சனவரி மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# நானாவித அறிவித்தல்கள்

## அரச ஊழியர் அபிவிருத்தி மன்றம் கூட்டிணைத்தல் சம்பந்தமான சட்டமூலம்

குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், எஸ். நெரஞ்சன் விக்ரமசிங்ஹ ஆகிய நான், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் நிலையியல் கட்டளை இல. 48 இன் கீழ் "அரச ஊழியர் அபிவிருத்தி மன்றத்தை கூட்டிணைத்தல் சட்டம்" என்ற ஒரு நகல் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நாடியுள்ளேன் என இத்தால் அறிவிக்கின்றேன்.

இச்சட்டத்தின் குறிக்கோளாவது சட்டத்தின் நோக்கங்களுக்கமைவாக குறிப்பிட்ட அரச ஊழியர் அபிவிருத்தி மன்றத்தை கூட்டுத்தாபனமாக கூட்டிணைத்தலாகும்.

1. மத்திய அரசினதும், பிராந்திய அரசினதும் அரச ஊழியர்களின் பொருளாதார சமூகநல சேவைகளுடன் கடன் வசதிகள் செய்துகொடுப்பது போன்ற அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளல்.

2. வேலைவாய்ப்பு ஏற்படக் கூடிய தொழிற் துரவுகளை ஆரம்பித்து அபிவிருத்தி செய்தல்.

பிறவும்.

எஸ். நெரஞ்சன் விக்ரமசிங்ஹ,
பாராளுமன்ற உறுப்பினர்.
குருநாகல் மாவட்டம்.

2011.10.24.

12- 1097

---

## சமஸ்த லங்கா சாஹனரக்ஷக்க மண்டலய" வை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

நாமல் ராஜபக்ஷ, பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் நிலையியல் கட்டளை இல. 48(1) இன் கீழ் "சமஸ்த லங்கா சாஹனரக்ஷக்க மண்டலயவை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனும் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க பிரேரித்துள்ளேன்" என இத்தால் அறிவிக்கின்றேன்.

இச்சட்டத்தின் குறிக்கோள், பின்வரும் பொது நோக்கங்களைக்கொண்ட சொல்லப்பட்ட சமஸ்த லங்கா சாஹன மண்டலயவை கூட்டிணைத்தலே ஆகும் :-

1. புத்த சமயத்தில் நீண்ட காலம் இருப்பவை மற்றும் நலன்கள் சார்பிலான ஒரு சட்டம் ;
2. பின்தங்கிய இடப்பரப்புகளில் அமைந்துள்ள புத்த கோவில்களை புனரமைத்தல் மற்றும் அபிவிருத்திக்கு அனுசரணை செய்தல் ;
3. தம்ம பாடசாலை கல்வியை அபிவிருத்தி செய்தல்.

பிறவும்.

நாமல் ராஜபக்ஷ,
பாராளுமன்ற உறுப்பினர்.
ஹம்பாந்தோட்டை மாவட்டம்.

12- 975

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.